# பயன்பாட்டு நோக்கு - குறுந்தொகையில் மலர்கள்

பெ.ஜான்சிராணி & முனைவர் த.மரகதம் [2]

[1] முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

[2] இணைப் பேராசிரியர்,

தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (நிலை-1),

அரியலூர்.

7

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வினை உடையவர்கள். இயற்கையைப் பாதுகாப்பதும் போற்றுவதும் தமிழரின் தலையாயக் கடமையாகும். தமிழர்களின் வாழ்வியல் சிறப்புகளையும் வரலாற்று சிறப்புகளையும் அறிந்துகொள்ள சங்க இலக்கியங்கள் துணைபுரிகின்றன. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் இயற்கைச் சார்ந்த செய்திகள் நிரம்பிக் காணப்படுகின்றது. சங்கபுலவர்கள் அவர்தம் பாடல்களில் மரம், செடி, கொடி, மலர் என இயற்கைப் பொருள்களைப் பெரும்பான்மை கையாண்டுள்ளனர். மணத்தாலும், நிறத்தாலும் யாவரையும் எளிதில் கவர்திலுப்பவை மலர்கள். இந்த மலர்களை ஒப்பனைக்கும், தெய்வவழிப்பாட்டிற்கும், திருமணம், சடங்குகள் போன்ற மங்கள நிகழ்ச்சிகளுக்கும் பண்டையத் தமிழர்கள் மிகுதியாகப் பயன்படுத்தினர். மலர்களின் மணம், நிறம், வடிவம், அவை மலரும் பருவநிலை அம்மலர்களை மக்கள் ஒப்பனைக்கு பயன் கொண்டமுறை ஆகியவற்றை குறுந்தொகைப்பாடல் வழியாக சிறப்பாக ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்**

அல்லி - ஆம்பல்மலர், குருதிப்பூ - காந்தள் மலர், கூதளி – கூதாளம் மலர், கூன்மலர்- பாதிரிபூ , குளவி- காட்டுமல்லிகை, மணிப்பூ- நெய்தல்மலர்

**முன்னுரை**

பண்டையத் தமிழர்கள் இயற்கையோடு இரண்டற கலந்த வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதை சங்க புலவர்களின் இலக்கியப் பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது. சங்க

தமிழர்கள் இலக்கியங்களை அகம் புறம் என இருவகையாகப் பாகுபடுத்தி உள்ளனர். அகம் காதல்கருவூலமாகவும் புறம் வீரத்தின் வித்தாகவும் போற்றப்படுகின்றது. சங்க கால மக்கள் நிலங்களை நான்குவகைகளாகப் பிரித்து அவற்றோடு ஐந்தாவதாகப் பாலைநிலத்தையும் சேர்த்து ஒவ்வொரு நிலத்திற்கும் அந்தந்த நிலத்தில் மலரக்கூடிய பூக்களின் பெயர்களைச் சூட்டினர். மேலும் அகத்திணைப் பாகுபாட்டிற்குரிய புறத்திணைப் பாகுபாட்டைக் கண்டறிந்து அப்புறத் திணைகளுக்கும் மலர்களின் பெயர்களைச் சூட்டி உள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் தொண்ணூற்றூ ஒன்பது வகையான மலர்களை அறிந்து பயன் கொண்டிருந்தனர். இன்று நாம் அவற்றுள் சிலவகை மலர்களை மட்டுமே அறிந்திருக்கின்றோம். மலர்களின் மணம், நிறம், வடிவம் போன்றவை மக்கள் மனதையும் உணர்வையும் நுண்ணிதின் கவர்ந்திழுக்கக் கூடியது. மலர்கள் மக்கள் வாழ்வில் ஒப்பனைக்கு மட்டும் பயன்படுத்தவில்லை அவை காதல், வீரம் மக்களின் உணர்வுகள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலியவற்றோடும் இயற்கையின் நிலைகளை உணர்த்தும் அடையாளக் குறியீடுகளாகவும் அமைகின்றன.

மேலும் ஆம்பல் பூ, வேங்கை பூ, முல்லைப் பூ , கொன்றைப் பூ, எருக்கம் பூ, மருதப் பூ, குவளைப் பூ, காந்தள் பூ, குறிஞ்சிப் பூ, காஞ்சிப் பூ, ஆவிரைப் பூ, நெய்தல் பூ, குளவிப் பூ, கூதாளம் பூ, பாதிரிப் பூ, தோன்றி பூ, பித்திகம் பூ, நரந்தம் பூ, முண்டகம் பூ, ஞாழல் பூ, இருப்பைப் பூ, வேப்பம் பூ, கஞ்சம் குல்லைப் பூ, அவரைப் பூ, கரும்புப்பூ என எண்ணிலடங்கா மலர்கள் பற்றியக் குறிப்புகள் குறுந்தொகைப் பாடல்களில் காணப்படுகின்றது. இவற்றுள் சிலவகை மலர்களைக் குறித்து இந்த கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

**ஆம்பல் மலர்**

அல்லி ஆம்பல் என்ற பெயரில் வழங்கப்படும் இந்த மலர் நீரில் வளரும் ஒருவகை கொடியில் பூக்கும் மலராகும். இக்கொடியை நீர்ச்சுனைகளிலும் ஏரி, குளம், பொய்கை, ஆறுகளிலும் காணமுடிகின்றது. அல்லி இனத்தில் ஐம்பது வகையான கொடிகள் உள்ளன. அல்லி மலர் இரவில் மலர்ந்து காலையில் கூம்பும் தன்மை உடையது. இந்த மலர் வெண்மை, நீலம், செம்மை எனப் பல நிறங்களில் இருக்கும். சங்க இலக்கியங்களில் அழகு, குளிர்ச்சி, காதல் போன்ற உணர்வுகளுடன் ஆம்பல் மலர் ஒப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது. சங்க கால மக்கள் உடலில் உள்ள

வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டும் குளிர்ச்சியின் காரணமாகவும் கூந்தல் போன்று நெருங்கிய தழைகளை உடைய ஆம்பலின் இலைகளைக் கொண்டு தழையாடை உடுத்தினர். இச்செய்தியை,

**"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்**

**பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி" (குறுந்,பா,80:1-2)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன. மேலும் பாரிமன்னன் கபிலரோடு வாழ்ந்து வந்த காலத்தில் அவன் பழக்கியப் பறவைகளைக் கொண்டு வயலில் விளைந்த நெற்கதிர்களைக் கொண்டு வரச் செய்து அவற்றுடன் ஆம்பல் மலரை பொரியல் ஆக்கி உண்ட செய்தியினை,

**"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லஇசை**

**வாய்மொழிக் கபிலன் சூழ சேய் நின்று**

**செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு**

**தடந் தாள் ஆம்பல் மலரரொடு கூட்டி"( அகம், பா,78:15-18)**

என்னும் அகநானூற்று பாடல் அடிகள் மூலம் அறியமுடிகின்றது.

**வேங்கை மலர்**

வேங்கை மலர் மஞ்சள் அல்லது செம்மை கலந்த நிறத்தில் வரிப்புலிப் போன்ற தோற்றத்துடன் கொத்துக் கொத்தாகப் பூக்கும். சங்க இலக்கியங்களில் இம்மலர் பெரிதும் போற்றப்படுகின்றது. மலைப்பகுதிகளில் இம்மலர் மிகுதியாகக் காணப்படுகின்றது. வேங்கை மலர் அறுவடை செய்யும் காலங்களில் பூக்கும் தன்மை உடையன என்பதால் சங்கத் தமிழர்கள் வேங்கை பூக்கும் காலத்தை திருமணத்திற்கு உரிய நல்லசகுனமாக கருதினர். மேலும் முழுவதுமாக அரும்புகள் மலர்ந்த கருமையான அடிபாகத்தை உடைய வேங்கை மரத்தின் மேல் கிளைகளில் அமர்ந்திருக்கும் மயிலானது வேங்கைப்பூக் கொய்யும் மகளிர் போல் காட்சியளித்தது அத்தகைய சிறப்புடைய மலை நாட்டுக்குரிய தலைவன் நம் தலைவி மீது அன்பு கொண்டான் என்று தோழிகூறுவதை,

**"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை**

**மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை**

**பூக்கொய் மகளிரிற் தோன்று நாடன்" (குறுந்,பா,26:1-3)**

என்ற குறுந்தொகைப் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றது.

**முல்லை மலர்**

முல்லைப்பூ மகளிர் விரும்பி சூடும் பூக்களில் ஒன்று. முல்லைப்பூவின் நறுமணத்தை நுகர்வதால் மனஅழுத்தம் குறையும் முல்லைப்பூ காடும் காடுசார்ந்த நிலப்பகுதியைக் குறிக்கும் திணைப்பூவாகும். இதுவெண்மையான கொடிப்பூ வகையைச் சார்ந்தது. தலைவன் பிரிவை தாங்கிஅவன் வரும்வரை காத்திருக்கும் தலைவியின் பொறுமை, அன்பு, கற்பு ஆகியவற்றை உணர்த்தும் அடையாளக் குறியீடாக முல்லைப்பூ அமைகின்றது. முல்லைப்பூ கார்காலத்தில் மலரக் கூடியது பொருள் தேடி தலைவியை பிரிந்து சென்ற தலைவன் கார்காலத்தில் திரும்புவதாகக் கூறிச்செல்கிறான். முல்லைப்பூக்கள் கார்காலத்தில் மலர தலைவியானவள் தலைவன் தன்னிடம் கூறிச்சென்ற கார்காலம் வந்தும் இன்னும் வரவில்லையே என்று ஏங்கி தவிக்கும் நிலையினை,

**"இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்**

**இவனும் வாரார் எவணரோ? எனப்**

**பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**

**தொகுமுகை இலங்கு எயிறு ஆக**

**நகுமே –தோழி நறுந்தண் காரே!" (குறுந்,பா,126)**

என்ற குறுந்தொகைப் பாடலில் இளமையின் அருமையை எண்ணி பார்க்காமல் பொருளே பெரிதென நினைத்து பிரிந்து சென்ற தலைவன் கார்காலம் வந்தும் வாராமையால் மழையில் நன்கு வளர்ந்து வரிசையாக அரும்புகள் விட்ட முல்லைப் பூக்கள் மிக்க குளிர்ந்த கார்காலம் வந்தும் உன்னுடைய தலைவன் வரவில்லை அவர் இந்த மழைக்காலத்தில் எங்கு இருக்கிறாரோ? என்று கேட்டு என்னை பார்த்து எள்ளி நகையாடுகிறது என்று தலைவி தோழி இடம் கூறுவதை அறியமுடிகின்றது. முல்லைப்பூவை பண்டைத் தமிழர்கள் கற்பின் அடையாளமாகக் கருதினர் என்பதை,

**"முல்லைச்சான்றகற்பின்மெல்லியல்" (சிறுபாண்,பா,அ,30)**

என்ற சிறுபாணாற்றுப்படைப் பாடல் அடி வழியாக அறிய முடிகின்றது.

**கொன்றை மலர்**

கொன்றைபூ கோடைக்காலத்தில் மிகுதியாகப் பூக்கும். இந்த மலர் சித்திரை மாதத்தில் மலர்வதால் சித்திரைக்கனிப்பூ என்ற பெயரில் வழங்கப்படுகின்றது. கொன்றைமலர் பொன்னிறம் உடையது. இம்மலர் சிவனுக்கு உரியதாக போற்றப்படுகின்றது. கொன்றை

மலரின் நிறம் தலைவியின் பசலைநோய்க்கு உவமையாக கூறப்பட்டுள்ளது. இதனை,

**"சென்றநாட்ட கொன்றை அம் பசுவீ**

**நம்போல் பசக்கும் காலை தம்போல்" ( குறுந், பா,183:1-2)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றது. கொன்றைபூ பொன்போல் மலர்ந்து காணப்படுவதை நற்றிணை,

**"பொன் எனக் கொன்றை மலர" ( நற், பா, 242:3)**

என்று குறிப்பிடுகின்றது.

**காந்தள் மலர்**

சங்க இலக்கியத்தில் பெரிதும் போற்றப்படும் மலர் காந்தள் மலராகும். இந்த மலர் தமிழ்க் கடவுள் முருகனுக்குரிய மலராகக் கருதப்படுகின்றது. இம்மலர் செந்நிறம் உடையதால் குருதிப்பூ என்றும் கார்த்திகை மாதத்தில் மலர்வதால் கார்த்திகைப்பூ என்றும் அழைக்கப்படுகின்றது. மேலும் காண்பவரின் கண்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய அழகுடையதால் இம்மலர் கண்வலிபூ என்ற பெயரிலும் வழங்கப்பட்டது. சங்க இலக்கியங்களில் காந்தள்மலர் பெண்களின் நீண்ட கைவிரல்களுக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது. விடம், புற்றுநோய் போன்ற நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகின்றது. சங்க இலக்கியங்களில் காந்தள்மலர் குருதிப்பூ என்ற பெயரில் வழங்கப்பட்டமையை,

**"கழல் தொடிச் சேஎய் குன்றம்**

**குருதிப் பூவின் குழைக்காந் தட்டே" (குறுந்,பா,1:3-4)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் வழியாக அறியமுடிகின்றது. மேலும் மகளிர் கைகூப்பித் தொழுவதைப் போல் நிமிர்ந்தநிலையில் காந்தளிதழ்கள் காணப்படுவதை,

**"கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்**

**எடுத்த நறவின் குழையலங் காந்தள்" ( கலி, பா,40:11-12)**

என்னும் கலித்தொகைப் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றது. கார்க்காலத்தில் மழை பொழிந்ததும் திடீரென்று கிளம்பி மேலே அழகிய பூவோடு தோன்றுவதால் தோன்றி என்றும் மேல் தோன்றி என்றும் காந்தள் மலர் அழைக்கப்படுகின்றது.

**குவளை மலர்**

குவளை மலர் அல்லது வெள்ளை அல்லி என இந்த மலர் அழைக்கப்படுகின்றது. இது

குளங்களில் பூக்கும் ஒரு நீர்த்தாவரமாகும். இம்மலர் குளங்கள், பொய்கைகள், ஆறுகள் போன்ற இடங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் குவளை மலர் பெண்களின் கண்களுக்கு ஒப்புமைப்படுத்தி கூறப்பட்டுள்ளதை,

**"அமளி தைவந் தனனே குவளை**

**வண்டுபடு மலரிற் சாஅய்த்**

**தமியேன் மன்ற அளியேன் யானே!" ( குறுந், பா,30:4-6)**

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவி தோழியிடம் தோழியே தலைவன் என்னைத் திருமணம் செய்து கொள்வதாக கூறினான். ஆனால் இன்னும் தலைவன் வந்து என்னை வரைந்து கொள்ளாததால் நான் வண்டுகள் வந்து விழுந்து வருந்திய குவளை மலரைப்போல் மெலிந்து தனியள் ஆனேன் என்று கூறுகிறாள். இதில் குவளை மலர் தலைவியின் வருத்தத்திற்கு குறியீடாக அமைகின்றது. இதனை,

**"தெள்நீர்க்கு ஏற்ற திரன் காற் குவளைப்**

**பெருந்ததை சிதைக்கம் அமையா பருந்துபட**

**வேத்து அமர்க் கடந்த வென்றி நல்வேல்" (அகம்,பா,27:13-15)**

என்ற அகநானூற்று பாடல் அடிகள் தெளிந்த நீரை ஏற்ற திரண்ட காம்பினை உடைய குவளை மலரின் அழகினைப் போன்ற செவ்வரி பரந்த மையுண்ட கண்களை உடையவள் தலைவி என்று குறிப்பிடுகின்றது.

**குளவி மலர்**

இது மலைமல்லிகை காட்டுமல்லிகை போன்ற பெயரில் வழங்கப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் இந்தமலர் அதிரல், மௌவல் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இம்மலர் கார்காலத்தின் முதல் மழைக்கு பிறகு மலரும். மேலும்

**" குளவி மொய்த்த அழுகற் சின்னீர்**

**வளையுடைக் கைய ளெம்மோ டுணிஇயர்**

**வருகதில் அம்ம தானே" ( குறுந்,பா,56:1-3)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் மூலம் விலங்குகளை வேட்டையாடிய காட்டு நாய்கள் தோண்டிய குழிகளில் தோன்றிய நீரில் அந்த நாய்கள் குடித்தது போக எஞ்சிய நீரில் காட்டுமல்லிகைப் பூக்கள் விழுந்து மூடியதால் அந்நீர் அழுகியநாற்றம் உடையதாக உள்ளது. வளையணிந்த தலைவி என்னோடு வந்திருந்தால் அந்நீரை என்னோடு சேர்ந்து உண்ணவேண்டிய நிலை வந்திருக்கும் என்று தலைவன் வருந்தும் செயலை

அறியமுடிகின்றது.

**பித்திகம் மலர்**

பித்திக மலர் கார்காலத்தில் இரவு நேரங்களில் மலரும் தன்மையுடையது. பண்டைத் தமிழர்கள் பித்திக மலர் மலரும் நேரத்தைக் கொண்டு காலத்தைக் கண்டறிந்தனர் என்பதை,

**"செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து**

**அவ் இதழ் அவிழ்ப் பதம் கமழ**

**பொழுது அறிந்து" ( நெடுநல், பா. அ,40-41)**

என்ற நெடுநல்வாடைப் பாடல் அடிகள் சங்க காலத்தில் மகளிர் பசுமையான காம்பினை உடைய பிச்சிமலரின் அரும்புகள் மலர்ந்து மணம் வீசுவதைக் கொண்டு மாலை காலம் வந்து விட்டதை உணர்ந்து விளக்கேற்றினர் என்பதை உணர்த்துகின்றது. மேலும் கார்காலத்தில் மலரும் பித்திகை மலர் கார்காலம் வரும் முன்னரே அது தன் அறியாமையால் மலர்ந்தது என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். இச்செய்தியை,

**"பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து**

**அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே" (குறுந்,பா,94:1-2)**

என்ற குறுந்தொகைப் பாடல் அடி வழியாக அறியமுடிகின்றது.

**பாதிரி மலர்**

சங்ககாலத்தில் மகளிர் சூடிவிளையாடிய மலர்களில் ஒன்று பாதிரிமலர். இது வேனிற் காலத்தில் மலரக் கூடியது இதன் இதழ்கள் குழாய் போன்ற அமைப்புடன் வளைந்து காணப்படுவதால் இதற்கு கூன்மலர் என்ற பெயரும் உண்டு. இதனை,

**"வேனிற் பாதிரிக் கூன்மலர் அன்ன**

**மயிர் ஏர்பு ஒழுகிய அம்கலூழ் மாமை" ( குறுந், பா,147:1-2)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றது. மேலும் பாதிரிப் பூவின் மணம் தேன் போன்று இனிமை உடையதாக இருப்பதால் இதனை தேங்கமழ்ப் பாதிரி என்று குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகின்றது.

**மருத மலர்**

மருத மலர் மழைக் காலங்களில் பூத்து மிகுதியான நறுமணத்தை தரும் இது காதல், தலைவன்,

தலைவி பிரிவு ஆகியவற்றின் அடையாளமாகத் திகழ்கின்றது, இச்செய்தியை,

**"செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்**

**துறை அணிந் தன்றவ ரூரே" ( குறுந், பா,50:2-3)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றது.

**கூதாளம் மலர்:**

இம்மலருக்கு கூதாளி, கூதளி என்ற பெயரும் உண்டு. இது கார்காலத்தில் மலரக் கூடியது. கூதாளம் மலர் ஒப்பனைக்கும் தெய்வ வழிபாட்டிற்கும் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. பண்டையக் காலத்தில் ஆண்கள் பெண்கள் இருவரும் இந்த மலரை அணிந்தனர். மேலும் குறுகிய அடிப்பகுதியை உடைய கூதாளம் செடி அசைந்தாடும் மலையில் உள்ள கொம்பு தேனுக்கு கால் இல்லா முடவன் ஆசைப்படுவது போல என்மீது அன்பும் அருளும் இல்லாத தலைவனைப் பலமுறை காண்பதே என் உள்ளத்திற்கு இனிமையானதாக இருக்கிறது என்று தலைவி கூறுகிறாள். இதனை,

**"குறுந்தாட் கூதாளி யாடிய நெடுவரைப்**

**பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்" (குறுந்,பா,60:1-2)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடி வழியாக அறியமுடிகின்றது.

**நெய்தல்மலர்**

இது நெய்தல் திணையின் அடையாள மலர் ஆகும். இலக்கியங்களில் இம்மலர் மகளிர் கண்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பண்டையக் காலத்தில் மக்கள் இதன் இலைகளை தழை ஆடையாக உடுத்தினார்கள். இந்த மலர் இலக்கியங்களில் மணிப்பூ, நீலமணி போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றது. நெய்தல் மலர் வைகறை பொழுதில் மலர்ந்து மாலையில் கூம்பிவிடும் என்ற செய்தியை,

**" மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்**

**பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக்" ( குறுந், பா,55:1-2)**

என்னும் குறுந்தொகைப் பாடல் அடிகள் சான்று பகர்கின்றன.

**ஒப்பனையில் மலர்கள்**

சங்ககாலம் தொட்டு இக்காலம் வரை மக்கள் மலர்கள் மீது அலாதி விருப்பம் உடையவர்களாக இருக்கின்றனர். தமிழர்கள் ஒப்பனைக்கு மலர்களை மிகுதியாகப் பயன்படுத்தினர். கோடல் மலர் முல்லை மலர் இரண்டையும் ஒருசேர நாரில் தொடுத்து இவற்றுடன் குவளை மலரையும் சேர்த்து தொடுத்தமாலையை அணிந்ததால் தலைவியின்

மேனி நறுமனுடையதாக இருக்கின்றது என்று தலைவன் கூறுவதை,

**"கோடல் எதிர்முகை பசுவீ முல்லை**

**நாறிதழ்க் குவலையொ டிடைப்பட விரைஇ**

**ஐது தொடை மாண்ட கோதைப் போல**

**நறிய நல்லோள் மேனி"( குறுந், பா,62:1-4)**

என்ற குறுந்தொகைப் பாடல் அடிகள் புலப்படுத்துகின்றது.

**மலர்களைப் பாதுகாத்தல்**

ஒப்பனைக்குரிய பூக்களை வாடாமல் பாதுகாத்து வைப்பதற்குச் சங்க கால மக்கள் செப்பு என்னும் கருவியைப் பயன்படுத்தினர் என்பதை,

**"மடை மாண் செப்பில் தமிய வைகிய**

**பெய்யாப் பூவின் மெய்சா யினளே" ( குறுந், பா,9:3-4)**

என்று குறுந்தொகைப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை:**

இறைவன் கொடுத்த இயற்கை கொடைகளில் மலர்களும் ஒன்று மனிதமனம் நிறைவடைவதற்கும் அமைதி அடைவதற்கும் அழகுணர்ச்சி தேவை அவற்றுள் தன் மணத்தாலும், நிறத்தாலும் ,வடிவத்தாலும் மனித மனதை எளிதில் கவர்ந்திழுக்கும் ஆற்றல் உடையவை மலர்கள்.

தமிழர்கள் வாழ்வியலில் மலர்கள் நீங்கா இடம் பெறுகின்றது. சங்க காலத்தில் மலர்களை அழகுக்காக மட்டும் மக்கள் பயன்படுத்தவில்லை அவை மக்கள் வாழ்வியலில் காதல், வீரம், நம்பிக்கை, சடங்குகள், மக்களின்உணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடையாளக் குறியீடுகளாகவும் அமைந்துள்ளது.

சங்க கால மக்களின் பண்பாட்டோடு மலர்கள் நெருங்கிய தொடர்புடையதாக இருந்திருக்கின்றது. மலர்களின் மணம், நிறம், வடிவம் அவை மலரும் சூழல் ஆகியவற்றை குறுந்தொகைப் பாடல்களில் உள்ள செய்திகள் மூலம் அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1.சோமசுந்தரனார் பொ.வே (உ.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 18, பதிப்பாண்டு-2007

2. நச்சினார்க்கினியர் (உ. அ), கலித்தொகை மூலமும் உரையும், கழகவெளியீடு,

சென்னை- 18, முதற்பதிப்பு- 1943

3. நாராயணசாமிஐயர் பின்னத்தூர் (உ.அ), நற்றிணை மூலமும் உரையும், கழகவெளியீடு, சென்னை- 18 முதற்பதிப்பு -1952

4. மாணிக்கவாசகன் ஞா (உ.அ), பத்துப்பாட்டுநூல்கள், உமாபதிப்பகம், மண்ணடி சென்னை – 600001 மூன்றாம் பதிப்பு- 2016

5. வேங்கடசாமி நாட்டார் ந.மு (உ.அ), அகநானூறு, மூலமும் உரையும், சாரதாபதிப்பகம், சென்னை- 14, பதிப்பாண்டு -2019